**செ.வெ.எண்: 587** **நாள்: 09.09.2019**

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கோரிக்கையின் படி காவிரி கூட்டு குடிநீர் திட்டத்தில் கூடுதலாக புதுக்கோட்டை மாவட்டத்தில் கிராமங்கள் பயன்பெறும் வகையில் நடவடிக்கை.**

**மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தகவல்**

---

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியம், மதயானைப்பட்டியில் செயல்பட்டு வரும் காவிரி கூட்டுக் குடிநீர் திட்ட நீருந்து நிலையத்தினை இன்று (09.09.2019) மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.ஆர்.காமராஜ் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி என்.நடராஜன் அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி.எஸ்.வளர்மதி அவர்கள் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

பின்னர் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் விராலிமலை, அன்னவாசல், பொன்னமராவதி உள்ளிட்ட பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களை சேர்ந்த 1,766 ஊரக குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 125 ஊரக குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ரூ.301.50 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்ட காவிரி கூட்டு குடிநீர் திட்டத்தில் விராலிமலை ஊராட்சி ஒன்றியம், மதயானைப்பட்டியில் உள்ள காவிரி கூட்டு குடிநீர் திட்ட நீருந்து நிலையம் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கோரிக்கையின் படி இத்திட்டத்தில் விடுபட்ட கிராமங்களை சேர்க்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களின் சிறப்பான செயல்பாட்டால் தமிழகத்தில் 50 ஆண்டுகளில் இல்லாத வளர்ச்சித் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உள்ளாட்சித்துறையின் சிறப்பான செயல்பாட்டால் நாகநிதி திட்டத்திற்கு வேலூர் மாவட்டம் மத்திய அரசின் விருதினை பெற்றுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களால் செயல்படுத்தப்பட்ட மழைநீர் சேகரிப்புத் திட்டம் தற்பொழுது அனைத்து பகுதிகளிலும் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இப்பணிகளை 3 மாதத்திற்குள் முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தொற்றுநோய் ஒழிப்பு பணிகள் குறித்தும், மேலும் உள்ளாட்சித்துறையில் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டப் பணிகள் குறித்தும் இன்றையதினம் ஆய்வு செய்யப்பட உள்ளது.

குறிப்பாக மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்திய சிறப்பான மக்கள் நலத்திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் திருச்சி, புதுக்கோட்டை உள்ளிட்ட 7 மாவட்டங்களில் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மழைநீர் சேகரிப்பு, பிரதமமந்திரி வீடு கட்டும் திட்டம், தொற்றுநோய் தடுப்பு திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் இன்றையதினம் ஆய்வு செய்யப்பட உள்ளது.

மேலும் தற்பொழுது திருச்சியில் ஸ்மாட் சிட்டி திட்டம், மழைநீர் சேகரிப்பு திட்டம், குடிமராமத்து திட்டம் போன்ற திட்டங்கள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குடிமராமத்து திட்டம் என்ற சிறப்பான திட்டத்தினை செயல்படுத்த உத்தரவிட்டுள்ளார்கள். குடிமராமத்து திட்டத்தின் கீழ் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள குளங்கள் மற்றும் வரத்து வாரிகள் தூர்வாரப்பட்டு வருகிறது.

இதேபோன்று ஊரக வளர்ச்சித்துறையின் கட்டுப்பாட்டில் கிராமங்களில் உள்ள குளங்கள் ரூ.1,250 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தூர்வாரப்பட்டு வருகிறது. குடிமராமத்து திட்டத்தின் கீழ் ஸ்ரீரங்கம் தொகுதியில் குளம் தூர்வாரும் பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இத்திட்டம் மிகுந்த பயனுள்ளதாக அமைந்துள்ளது என்று பொதுமக்கள் கருத்து தெரிவித்தனர். இவ்வாறு மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக

வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் முன்னதாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் புதுக்கோட்டை மாவட்ட மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ரூ.301.50 கோடி மதிப்பீட்டில் காவிரி கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மதயானைப்பட்டி நீருந்து நிலையம் இன்றையதினம் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

மதயானைப்பட்டி நீருந்து நிலையத்தில் தரைமட்ட நீர்தேக்கத் தொட்டி 2 எண்ணிக்கையில் முறையே 5,90,000 லிட்டர் மற்றும் 2,48,000 லிட்டர் கொள்ளளவு கொண்டதாகும். இங்கு 150 குதிரை திறன் கொண்ட 3 மின்மோட்டார்கள் மூலம் 11,836 லிட்டர் நிமிடத்திற்கு 74 மீட்டர் அழுத்தத்துடன், இயக்கப்பட்டு 192 தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிக்கு குடிநீர் அனுப்பப்பட்டு 1,570 கிராமங்களுக்கு குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் இப்பகுதி பொதுமக்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்த ஆய்வின் போது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் (பொ) திரு.கா.பாஸ்கரன், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர்.சி.என்.மகேஸ்வரன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**